தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பங்குனி 15, தாரண – திருவள்ளுவர் ஆண்டு 2036

2005 மார்ச் 28, திங்கட்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை"

எண்ணிலடங்கா நிறைந்த பண்புகள் பலவற்றையும் உடைய அறிவாற்றலிற் சிறந்த சான்றோரைப் போற்றிப் புகழ்ந்து வணங்காதவர்கள், ஐம்புலன்களையும் இழந்த ஐம்பொறிகளைப் போல பயனற்றவர்களாகவே கருதப்படுவார்கள்.

1. இரங்கற் குறிப்பு

முன்னாள் உறுப்பினர் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரங்கற் குறிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினரான திரு. என்.கே. பழனிசாமி அவர்கள் 23–3–2005 அன்று மறைவுற்ற செய்தியினை பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. என்.கே. பழனிசாமி அவர்கள் 1952 முதல் 1957 வரை அன்றைய ஊத்துக்குளி தொகுதியிலிருந்தும், 1957 முதல் 1962 வரை மற்றும் 1971 முதல் 1976 வரை பெருந்துறை தொகுதியிலிருந்தும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டு போற்றத்தக்க வகையில் பணியாற்றியுள்ளார்.

இம்முன்னாள் உறுப்பினரது மறைவால் அவரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் இப்பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த இப்பெருந்தகைக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித் துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித் துளிகள் அமைதி காத்தனர்.)

2. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள், வினா எண் 201, 202 மற்றும் 203 பின்னர் எடுத்துக்கொள்ளப்படும். வினா எண் 204, திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி, மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்.

204—

கணினி பயிற்சி

***5333—திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி:**

மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கணினி பயிற்சி நடத்தும் தனியார் அனைவரும் அரசிடம் அனுமதி பெற்று நடத்துகிறார்களா?

(ஆ) அனுமதி பெறாதவர்கள்மீது அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) கணினி பயிற்சி நடத்தும் தனியார் அனைவரும், அரசிடம் அனுமதி பெற வேண்டுமென விதி ஏதுமில்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி, இருக்கையில் இல்லை. வினா எண் 205, திரு. மே.ப. காமராஜ், மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.